



*போதகர் டோனி அலமோ* *அலமோ கிறிஸ்தவ மண்டலம்* *தொகுதி* ***17700***


# நம்முடைய கிரகத்தின் மேல் பறந்துக் கொண்டிருக்கும் பரலோகதூதர்கள்

**- டோனி அலமோ**



*டோனி அலமோவும், சூசன் அலமோவும், இசைக் குழுவினரும் மற்றும் பாடகர்களும், 70களிலும் மற்றும் 80களிலும் பங்குபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி.*

"தேவனுடைய இரதங்கள், பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது; ஆண்டவர் அவைகளுக்குள் இருக்கிறார்" (சங்கீதம் 68:17) தேவனின் இரதங்கள் என்று சொல்லப்பட்டவை இன்று (UFO) என்றறியப்படும் பறக்கும் தட்டுகளே என்று அதிக நிச்சயமாய் கூறலாம். அவை மற்ற எந்தக்கிரகத்திலுமிருந்தும் வரவில்லை; அவர்கள் தேவனுடைய தூதர்கள் ஆவர். அவர்கள் நூறுநூறு ஆண்டுகளாய், தேவனுடைய பிரமாணத்துக்கும்,[1] இரட்சிப்பின் சுதந்திரவாளிகளுக்கும், எதிராக நிகழும் குற்றங்களிலிருந்து, பூமியைக் கண்காணிக்கின்றனர்.

எபிரேயர் 1:10-14ல் "கர்த்தாவே நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது: அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர். அவைகளெல்லாம் வஸ்திரம் போலப் பழமையாய்ப்போம்; ஒரு சால்வையைப் போல அவைகளைச் சுருட்டுவீர்; அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர். உம்முடைய ஆண்டுகள் முடிந்துபோவதில்லை, என்றும் சொல்லியிருக்கிறது. மேலும், உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என் வலது பாரிசத்தில் உட்காரும் (கிறிஸ்துவுக்கு மட்டும் கூறியது போல்) என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா? இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு, அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் தேவனுடைய இரதங்களாய் இல்லாமலிருந்தால், (பலரால் UFO என்று அழைக்கப்படுவது) தேவனுடைய பணிவிடை ஆவிகள், ஒவ்வொருநாளும் இருபத்து நான்கு மணிவேளையும் பூமியில் பரிசுத்தவான்களின் நற்செயல்களையும், துன்மார்க்கரின் தீய செயல்களையும், எவ்வாறு கண்காணிக்க இயலும்?

என்னதான் எல்லாம் அறிந்த தேவனாயிருந்தாலும், பரிசுத்தவான்களை ஆசிர்வதிக்கவும், துன்மார்க்கரை எச்சரிக்கவும், சபிக்கவும், அழிக்கவும் எந்தத் தூதர்களை அவர் அனுப்பவேண்டும்? எந்த நேரத்தில் அவர்களை அனுப்பவேண்டும் என்று தேவனுக்கு எப்படித் தெரியும்?

எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 32:12ல் கர்த்தர், பின்பு இஸ்ரவேல் என்றழைக்கப்பட்ட யாக்கோபிடம் "நான் உனக்கு மெய்யாகவே நன்மை செய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன்" என்று கூறினார். ஆனாலும் தாவீதரசன் இஸ்ரவேல் தேசத்திலுள்ள எல்லா மக்களையும் தொகையிடத் தீர்மானித்தபோது, அவன் மனதில் என்ன எண்ணினான் என்று தேவன் அறிந்திருந்தார். இப்படித்தான் அது துவங்கியது. (1 நாளாகமம் 21:1-2)ல் சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாக, எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடத் தாவீதை ஏவியது என்று கூறுகிறது. (கர்த்தர் சொன்னபடி இஸ்ரவேலர் எண்ணிமுடியாத அளவு இருந்தார்கள்). (எபிரேயர் 11:12) தாவீது, யோவாபிடமும் மூப்பர்களிடமும் (தலைவர்கள்), "நீங்கள் போய், பெயர்செபா தொடங்கித் தாண்மட்டும் இருக்கிற இஸ்ரவேலரை, எண்ணி அவர்கள் இலக்கத்தைக் கொண்டுவாருங்கள் நான் அதை அறியட்டும்" என்றான். சாத்தானுக்குக் கீழ்ப்படிந்து[2] தன் இருதயத்தில் ஏவப்பட்ட ஏவாளைப்போல், தாவீதும் தன் இருதயத்தில் ஏவப்பட்டவனாய், சர்வவல்லவருக்கு மட்டும்தான் தொகை தெரிய வேண்டுமா? அவர் தொகையறிந்தது போல் நானும் அறிவேன் என்றெண்ணினான். கர்த்தர் ஆதாமோடும், ஏவாளோடும் தன் வார்த்தையைக் கேளாததினாலும், கீழ்படியாததினாலும் கோபங்கொண்டு, பூமியில் வாழுகின்ற மற்றும் வாழப் போகின்ற எல்லா ஆன்மாவும் மரணம், நரகம், அக்கினிக்கடலில் நித்தியமாய் தள்ளப்படுதல் போன்றவற்றால் சபிப்பாரேயென்றால், எப்படி தாவீதைக் கீழ்படியாமையிலும், பாவத்திலும் உள்ளாகி, தேவனுடைய கட்டளைகளுக்குச் செவிசாய்க்காமலும், சாத்தானின் கட்டளைக்குக் கீழ்படிய அனுமதிப்பார்?[2] தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல[3] அவரிடம் கீழ்படியாமைக்காக, ஆதாமையும், ஏவாளையும் சபித்தார். அவரிடம் கீழ்படியாமைக்காக அவரது கண்மணி போன்ற தாவீதைச் சபித்தார் என்றால், அவ-


*(பக்கம் 2 ல் தொடர்கிறது)*


**1** ஆதி. 18:20-22, 19:1-25, எண். 22:21-35, 2சாமு. 24:10-16, 2இரா. 6:8-17, 2நாளா. 20:1-29, 32:1-22, சங். 34:7, 35:4-5, 68:17, தானி. 6:21-22, சகரி. 1:7-21, 2:1-5, அதிகா. 4, மத். 28:1-7, அப். 5:17-24, 12:1-12, 21-23, வெளி. 7:1-2, அதிகா. 8, 9:1-5, 13-21, 14:6-11, 15-20, 15:1, 5-8, அதிகா. 16, 18:1-6, 21, 19:17-18, 20:1-3 **2** ஆதி. 2:16-17, 3:1-19, ரோம. 5:12-18, 1 கொரி. 15:22, 47 **3** லேவி. 19:15, உபா. 1:17, 16:19, 1 சாமு. 26:23, 1 இரா. 8:32, 2 நாளா. 6:23, 19:7, சங். 9:8, நீதி. 24:23, 28:21, ஏசா. 45:21, அப். 10:34, ரோம. 2:11, எபே. 6:9, கொலோ. 3:25, யாக். 2:1-10, 1பேதுரு 1:17, வெளி. 15:3

## நம்முடைய கிரகத்தின் மேல் பறந்துக் கொண்டிருக்கும் பரலோகதூதர்கள

*(பக்கம் 1 லிருந்து தொடர்கிறது)*

ரிடம் கீழ்படியவில்லையென்றால் என்னையும் , உங்களையும், எல்லாரையும் சபிப்பார் அன்றோ?[4]

தாவீது இஸ்ரவேல் மக்களைத் தொகையிட யோவாபுக்குக் கட்டளையிட்டபின்பு, யோவாபு, "கர்த்தருடைய ஜனங்களை நூறத்தனையாய் வர்த்திக்கப்பண்ணுவாராக. ஆனாலும் ராஜாவாகிய என் ஆண்டவனே, அவர்களெல்லாரும் என் ஆண்டவரின் சேவகரல்லவோ? என் ஆண்டவன் இதை விசாரிப்பானேன்? இஸ்ரவேலில் குற்றமுண்டாக இது நடக்கவேண்டியது என்ன? என்றான். எப்படியோ, ராஜாவின் வார்த்தை யோவாபை மேலிட்டபடியால், யோவாப் புறப்பட்டு போய் இஸ்ரவேல் தேசம் முழுவதும் போய், எருசலேமிற்கு வந்தான். யோவாப் இஸ்ரவேல் மக்களின் தொகையின் இலக்கத்தை தாவீதிடம் கொடுத்தான். இஸ்ரவேலில் பட்டயம் உருவத்தக்கவர்கள் பதினொருலட்சம் பேர் (1,100,000). யூதாவில் பட்டயம் உருவத்தக்கவர்கள் நாலுலட்சத்து எழுபதினாயிரம் பேர் (470,000). ராஜாவின் வார்த்தை (தேவனைப்போல்) யோவாபுக்கும் அருவருப்பாக இருந்தபடியால், லேவி, பென்யமீன் கோத்திரங்களில் உள்ளவர்களை அவன் எண்ணாதே போனான்.

இந்தக் காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாததானபடியினால்; அவர் இஸ்ரவேலை வாதித்தார். தாவீது தேவனை நோக்கி; நான் இந்த காரியத்தைச் செய்ததினாலே மிகவும் பாவஞ்செய்தேன். இப்போதும் உம்முடைய அடியேனின் அக்கிரமத்தினின்று நீக்கிவிடும். வெகு புத்தியீனமாய்ச் செய்தேன்; என்றான். அப்போது தேவன் தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய (தீர்க்கதரிசி) காத்துடனே பேசி, "நீ தாவீதினிடத்தில் போய் மூன்று காரியங்களை (மூன்று சாபங்கள்) உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள். அதை நான் உனக்குச் செய்வேன்; என்று கர்த்தர் உரைத்தார் என்று சொல்; என்றார். அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி, மூன்று வருஷத்துப் பஞ்சமோ? அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்று மாதச் சங்காரமோ? அல்லது கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோயோ? இவைகளில் ஒன்றைத் தெரிந்துகொள். என்று கர்த்தர் உரைக்கிறார். இப்பொழுதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறு உத்தரவு கொண்டுபோக வேண்டும். என்பதை யோசித்துப் பாரும் என்றான். அப்பொழுது தாவீது காத்தை நோக்கி, கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன், இப்போது நான் கர்த்தருடைய கையில் விழுவேனாக. அவருடைய இரக்கங்கள் மகா பெரியது. மனுஷர் கையில் விழாதிருப்பேனாக என்றார். ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலிலே கொள்ளைநோயை அனுப்பினார். (ஒரு தூதரால் இயக்கப்பட்ட பறக்கும் தட்டு). அதினால் இஸ்ரவேலில் எழுபதினாயிரம்பேர் மடிந்தார்கள். எருசலேமையும் அழிக்க தேவன் (ஒரு தூதனை) அனுப்பினார். ஆனாலும் அவன் அழிக்கையில் கர்த்தர் பார்த்து அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, சங்கரிக்கிற தூதனை (கண்காணிப்பவர்) நோக்கி, "போதும் இப்பொழுது உன் கையை நிறுத்து" என்றார். கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய ஓர்னான் களத்தண்டையில் நின்றான். அப்போது தாவீது தன் கண்களை ஏறெடுத்துப்பார்க்கும்போது, பூமிக்கும் வானத்துக்கும் நடுவே நிற்கிற தேவதூதன் எருசலேமுக்கு நேராக உருவிய பட்டயத்தை நீட்டியபடி நின்றதைக் கண்டான். அதைப் பார்த்து இரட்டுப் போர்த்துக் கொண்டு (இது அவர்கள் உபவாசித்தனர் என்பதைக் குறிக்கும்) தாவீதும் மூப்பர்களும் முகங்குப்புற விழுந்தனர். தாவீது தேவனை நோக்கி, ஜனத்தை எண்ணச்சொன்னவன் நான் அல்லவோ? நான் தான் பாவம் செய்தேன்; பொல்லாப்பு நடப்பித்தேன் இந்த ஆடுகள் என்ன செய்தது? என் தேவனாகிய கர்த்தாவே, வாதிக்கும்படி உம்முடைய கரம் உம்ஜனத்தின்மேலிராமல், எனக்கும் என் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருப்பதாக; என்றான். அப்பொழுது எபூசியனாகிய ஓர்னானின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும்படி, தாவீது அங்கே போக வேண்டுமென்று தாவீதுக்குச் சொல் என்று கர்த்தருடைய தூதன் காத்துக்குக் கட்டளையிட்டான். அப்படியே தாவீது கர்த்தரின் நாமத்திலே காத் சொன்ன வார்த்தையின்படியே போனான்.

ஓர்னான் திரும்பிப் பார்த்து தேவதூதனைக் கண்டான். அவனோடிருந்த அவனுடைய நான்கு குமாரர்களும் ஒளித்துக் கொண்டார்கள் (இன்று, சிலசமயங்களில் "UFOS" என்றழைக்கப்படும் பறக்கும் தட்டுகளாகிய தேவதூதர்கள் மேலே பறப்பதைக் காண்கிறார்கள். அவர்கள் வேறு எந்தக் கிரகத்திலிருந்தும் வரவில்லை, பரலோகத்திலிருந்தே வருகின்றனர்). இப்போது ஓர்னான் போரடித்துக் கொண்டிருக்கிறான், தாவீது ஓர்னானிடத்துக்கு வந்தபோது ஓர்னான் அவனைக் கவனித்து தாவீதைப் பார்த்து, களத்திலிருந்து புறப்பட்டுவந்து, தரைமட்டும் குனிந்து தாவீதை வணங்கினான். தூதனையும், பின்னர் தாவீதையும் பார்த்தபோது இருவருக்கும் நடுவில் ஒரு வலுவான இணைப்பு இருப்பதைப்போல் உணர்ந்தான். (ஓர்னான் பயந்து தாவீதின் முன் தலைகுனிந்து வணங்கினான், தரையில் முகங்குப்புற விழுந்து) தாவீது ஓர்னானிடம் இந்த களத்தின் நிலத்திலே நான் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு அதை எனக்குக் கொடு. வாதை ஜனங்களை விட்டு நிறுத்தப்பட அதைப் பெறும் விலைக்கு எனக்குக் கொடு என்றான். ஓர்னான் தாவீதை நோக்கி "ராஜா அதைக்கொண்டு உங்களுக்கு நலமானதைச்செய்வாராக. இதோ, சர்வாங்க தகனங்களுக்கு மாடுகளும், விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும், போஜனபலிக்குக் கோதுமையும் யாவையும் கொடுக்கிறேன்" என்றான். தாவீது ஓர்னானை நோக்கி அப்படியல்ல, நான் உன்னுடையதை இலவசமாய் வாங்கி சர்வாங்க தகனபலியிடாமல், அதைப் பெறும் விலைக்கு வாங்குவேன், என்றான். தாவீது அறுநூறு சேக்கல் நிறை பொன்னைக் கொடுத்தான், அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்கதகனபலிகளையும் செலுத்தி, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். அப்போது வானத்திலிருந்து சர்வாங்க தகனபலியின் மேல் இறங்கிய அக்கினியினால் அவர் (தேவன்)அவனுக்கு மறுஉத்தரவு கொடுத்ததுமல்லாமல் தேவதூதன் தன்னுடைய பட்டயத்தைத் திரும்பவும் உறையில் போட வேண்டுமென்று கர்த்தர் அவனுக்குக் கூறினார்.

எபூசியனாகிய ஓர்னானின் களத்திலே கர்த்தர் தனக்கு உத்தரவு அருளினதைத் தாவீது அக்களத்திலே கண்டு அங்கு தானே பலியிட்டான். மோசே வனாந்திரத்தில் உண்டாக்கின கர்த்தருடைய வாசஸ்தலமும் சர்வாங்க தகன பலியீடமும் அக்காலத்திலே கிபியோனின் மேட்டிலே இருந்தது. தாவீது கர்த்தருடைய

### மளாவி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் அவர்களே!

தேவனுக்குள் என் வாழ்த்துக்கள். எனக்குத் தேவையான நேரத்தில் நீங்கள் அனுப்பிவைத்த புத்தகக்கட்டு கிடைத்தது, என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏராளமான மக்கள் கிறிஸ்துவைத் தெய்வமாக ஏற்றுக்கொண்ட மிதான்டிலி வர்த்தக நிலையத்தில் உங்கள் புத்தகங்களை விநியோகித்தோம். ஆமென் எங்கள் குழுவிலுள்ள உறுப்பினர்களுக்குக் கொடுப்பதற்காக, இன்னும் அதிக அளவில் வேதாகமங்கள், மேசியா புத்தகங்கள், சான்றிதழ்கள், டி-சட்டைகளை அனுப்பத் தயங்க வேண்டாமென்பது என் வேண்டுகோள் ஆகும். நாங்கள் போதகர் அலமோவிற்கும், உங்கள் ஊழியத்தில் உபத்திரவங்களுக்காகவும் எப்போதும் ஜெபிக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் உங்கள்,

ஈவான்ஸ் நாவ்லியா, லிம் பே, மளாவி

4 ஆதி. 3:1-19, யாத். 23:20-21, உபா. 11:26-28, 28:61-63, 1 சாமு. 12:14-15, 15:22-23, 2 சாமு. அதிகா. 11, 12:1-23, யோபு 36:7-12, எரே. 12:16-17, 18:9-10, ரோம. 2:5-13, 6:12-16, எபே. 5:3-6, 2 தெச. 1:7-9, எபி. 2:1-4

தூதனின் பட்டயத்திற்குப் பயந்திருந்தபடியால் அவன் தேவசந்நிதியில் போய் விசாரிக்கக்கூடாதிருந்தது. (1 நாளாகமம் 21:3-30) தேவன் தமது தூதர்களை, சபிக்கவும், அழிக்கவும் பயன்படுத்தியதைக்காட்டும் பல வேதபகுதிகள் உண்டு.[5]

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி நாகூம், தனிவழிகளும் தானியங்கி ஊர்திகளும் பற்றி அவருக்கு தெரிந்த விதத்தில் விவரிக்கிறார். நாகூம் 2:4 “இரதங்கள் தெருக்களில் கடகட என்றோடி, வீதிகளில் இடசாரி வலசாரி வரும். அவைகள் தீவட்டிகளைப் போல விளங்கி, மின்னல்களைப்போல் வேகமாய் பறக்கும்” என்கிறார். இவை கடைசிகால தனிவழிகளும் தானியங்கி ஊர்திகள் குறித்த தீர்க்கதரிசனங்கள் ஆகும். அது எப்படி என்பது அவருக்கு மட்டும் தான் தெரியும்.

வேறெந்தக் கிரகத்திலும் உயிர்வாழினமும் இல்லை; சிருஷ்டியும் இல்லை. அதனால் பறக்கும் தட்டுகள் அல்லது UFOS பரிகசிக்கத்தக்கதும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததும் என்று நினைப்பது தவறாகும். அவை எந்தக் கிரகத்திலிருந்தும் வரவில்லை, பரலோகில் உள்ளவை ஆகும். இதற்கெல்லாம் மேலாக தேவன் நம்மை விசுவாசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். அவருடைய கட்டளைகளை மீறும்போது, நாம் விசுவாசிக்கமாட்டோம் என்று அவர் அறிவார்.

அவருடைய வானத்தையும், அவருடைய பூமியையும் பற்றி அவர் ஆதியாகமம் 1:14-15ல் “பின்பு தேவன், பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, (பூமியில் வேறெந்தக் கிரகத்திலும் அல்ல, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காக திரும்பவும் ( பூமி என்ற கிரகத்துக்காக மட்டும்) அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படி, வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார். (பூமிக்காக மட்டும் தான் மார்ஸ், ஜூபிடர், மெர்குரி அல்லது வேறெந்தக் கிரகத்துக்காகவும் அல்ல) அது அப்படியே ஆனது. இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் ஊழல்களுக்கும், வன்முறைகளுக்கும், இன்னும் கொடுமையாக நடக்கப்போகும் செயல்களுக்கும் நீங்கள் கூறுகின்ற தாய்பூமியை விட்டு, தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணிவிடாதீர்கள். வேறெந்தக் கிரகத்துக்காவது போய் வாழலாம் என்று நினைத்து விடாதீர்கள். வேறெந்த கிரகத்திலும் வேறெந்த இடத்திலும் உயிர்வாழ இயலாது. பூமியில் எந்த இடத்திலும் அமைதியைக் காண முடியாது. ஏனென்றால் நாம் பொல்லாத மனிதர்கள். நம் இருதயங்களில் தேவன் இல்லாமல், நாம் எப்போதும் தீமைக்குள்ளாவோம். UFOS என்றழைக்கப்படும் பறக்கும் தட்டுகள் (கண்காணிப்பவர்கள்) தேவதூதர்கள் வேறெந்த கிரகத்திலுமிருந்து வந்தவர்கள் என்ற நினைவை, உங்கள் சிந்தையிலிருந்து வெளியேற்றுங்கள். நீங்கள் அந்த வஞ்சிக்கிற கருத்தை நம்பினீர்களென்றால், 2தெசலோனிக்கேயர் 2:8-12 கூறியபடி, தேவன் ஒரு வலுத்த கற்பனையான கருத்தை ஏற்கனவே அனுப்பி இருக்கிறார். நீக்கப்படும்போது’ அந்த அக்கிரமக்காரன் (பிசாசு, சாத்தான், அந்திகிறிஸ்து) வெளிப்படுவான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், (பெலவீனமான, வறிய சாத்தானின் வல்லமை) பொய்யான அற்புதங்களோடும், (UFOS பறக்கும் தட்டுகள் வேறு கிரகத்திலிருந்து வந்தவை, பிற கிரகங்களில் வாழ முடியும் என்பது போன்ற பொய்கள்) விளங்கும். எல்லா வஞ்சகங்கள் [ஒரே பாலின திருமணங்கள் சரியானவை, கருக்கலைப்பு, திட்டமிட்டு கொலைசெய்தல் சரியானது,[6] ஒரே பாலின உறவுகள் சரியானது,[7] விபச்சாரம்,[8] முறையற்ற உறவுகள்,[9] மதுவுக்கு போதைக்கு அடிமையாதல் சரியானது,[10] நகைச்சுவை சரியானது,[11] திருட்டு,[12] தேவதூஷணம் சரியானது,[13] தேவனை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அன்புகூராமலிருப்பது சரியானது,[14] தேவனுக்கு ஊழியம் செய்யாமலிருப்பது சரியானது, மற்றும் பொருளாசை சரியானது,[15]] அவர்களிலுள்ள நீதியின் தன்மை அழிந்துபோம், ஏனென்றால் அவர்கள் இரட்சிக்கப்படுவதற்குரிய சத்தியத்தின் மேலுள்ள வாஞ்சையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இந்தக் காரணத்தால், அவர்கள் பொய்யை நம்பும்படியான, பெலமான ஒரு கற்பனைக் கூற்றை அனுப்புவார். (பறக்கும் தட்டுகள் வேறு கிரகத்திலிருந்து வந்தவை, மற்ற கிரகத்திலும் உயிர் வாழலாம்) போன்ற பொய். அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.

ஆதியாகமம் முதல் அதிகாரத்தை திரும்ப பார்ப்போம். தேவன், பகலை ஆளப் பெரிய சுடரும் (சூரியன்), இரவை ஆளச் சிறிய சுடரும் (சந்திரன்) ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார். அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும், (வேறெந்தக் கிரகத்திலும் அல்ல) தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார். தேவன் அது நல்லது என்று கண்டார். (ஆதியாகமம் 1:16-18).

இப்போது எதை நம்புகிறீர்கள்? எது நல்லது எது தீயது என்று நம்புகிறீர்கள்? தேவன் நம்மை பூமியின் துகளிலிருந்து உண்டாக்கினார். அல்லது நீங்கள் விஞ்ஞானிகளை நம்புகிறீர்களா? நீங்கள் தேவனை நம்புகிறீர்களா? அல்லது தவறாக காலங்களை அளவிடும் கார்பன் டேடிங் இயந்திரத்தை நம்புகிறீர்களா? இந்தப் பூமி 6000 வருடங்கள் வாழ்வது என்று நம்புகிறீர்களா? அல்லது லட்சக்கணக்கான வருடங்களாக வாழ்வது என நாத்திகர்கள் சொல்லும் பொய்யை நம்புகிறீர்களா? கர்த்தருடைய வார்த்தைக்குப் பதிலாக பொய்யை நம்புவீர்கள் என்றால் அப்போது பெலமான வஞ்சனையை நம்பி சபிக்கப்படுவீர்க-

*(பக்கம் 4 ல் தொடர்கிறது)*

---

**5** ஆதி. 19:1-25, எண். 22:1-35, 25:1-9, 2 சாமு. 24:1-17, 2 இரா. 19:35, 1 நாளா. 21:9-30, 2நாளா. 32:19-22, வெளி. 7:1-2, அதிகா. 8, 9:1-5, 13-21, 14:8-11, 15-20, அதிகா. 16, 18:1-2, 21, 19:17-21, 20:1-3, 21:9

**6** ஆதி. 9:5-6, யாத். 20:13, 21:12-15, 22-23, லேவி. 24:17, எண். 35:16-21, 30-33, உபா. 5:17, 27:24-25, சங்.139:13-16, நீதி. 1:10-16, 6:16-18, எரே. 1:5, மத். 19:18, மாற். 10:19, லூக். 18:20, ரோம. 13:9, கலா. 5:19-21, 1 தீமோ.1:9-10, யாக். 2:11, 1 யோவா. 3:15, வெளி. 9:20-21, 21:8, 22:14-15 **7** ஆதி. 19:1-13, 24-25, லேவி. 18:22, 20:13, உபா. 22:5, 23:17, நியா. 19:22-25, ரோம. 1:20-32, 1 கொரி. 6:9-10, 1 தீமோ. 1:9-10, 2 தீமோ. 3:1-5, யூதா 7 **8** யாத். 20:14, லேவி. 18:20, 20:10, உபா. 5:18, 22-24, 1 இரா. 14:24, 15:11-12, நீதி. 6:29, 32-33, எரேமியா 5:8-9, எசேக்கியேல் 18:10-13, 22:11, மல்கியா 3:5 மத். 5:27-28, 15:19-20, 19:18, மாற். 7:21-23, லூக். 18:20, ரோம. 13:9, 1 கொரி. 6:9-10, யாக்கோபு 2:10-12 **9** 1 கொரிந்தியர் 5:9-11, 6:9-10, 13-18, 7:2, 10:7-8, 2 கொரி. 12:21, எபே. 5:3, கொலோ. 3:5-6, 1 தெச. 4:3-5, யூதா 7, வெளி. 2:14, 20-22, 9:20-21 **10** உபா. 21:20-21, நீதி. 23:21, 29-35, 31:4-5, ஏசா. 5:11, 22-23, 28:1-4, நாகூம் 1:9-10, லூக். 21:33-36, ரோம. 13:12-14, 1கொரி. 5:10-12, 6:9-10, கலா. 5:19-23, 1தெச. 5:6-8, 1தீமோ. 3:8-9, தீத்து 1:7-9, 2:1-5, 1பேது. 4:1-5, 2பேது. 1:5-8 **11** பிரச. 2:1-3, 7:2-6, மத். 12:36, எபே. 5:3-4, 1 தீமோ. 2:9-10, 15, தீத்து 2:1-8, 12, 1 பேது. 1:13-16, 4:7, 5:8 **12** யாத் 20:15, 22:1-4, லேவி. 19:11, **13** உபா. 5:19, சகரி. 5:3, மத். 15:19-20, 19:18, மாற். 7:21-23, லூக். 18:20, 19:45-46, ரோமர் 13:9, 1கொரி. 6:10, எபே. 4:28, வெளி. 9:21 13 லேவி. 24:11-16, 23, மத். 12:22-32, 15:19-20, லூக். 12:9-10, வெளி. 13:1-9, 14:8-11, 17:1-9 **14** உபா. 4:29, 6:5, 10:12, 11:13, 13:3-4, 26:16, 30:6, யோசு. 22:5, மத். 22:37-40 **15** யாத். 18:21, 20:17, உபா. 5:21, சங் 10:3, மீகா 2:1-3, மாற். 7:21-23, ரோமர் 1:28-32, 13:8-9, 1 கொரி 5:9-11, 6:9-10, எபே. 5:1-5, கொலோ. 3:5-6, 2தீமோ. 3:1-5, 2பேது. 2:1-3, 12-14, 1யோவா. 2:15-17

## இந்தியா

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே!

உங்களுக்கு பரிசுத்த வாழ்த்துதல்கள். இன்றுஉங்கள் அற்புதமான எழுத்துக்களைப் பெற்றுக்கொண்டோம். உங்கள் செய்தி மடலில் என் ஞானஸ்தான ஆராதனையில் எடுத்தபுகைப்படம் இடம்பெற்றிருந்ததற்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

உங்கள் ஜெப ஆதரவால் இங்கே நாங்கள் மார்ச் 4,5,6 ஆகிய தேதிகளில் நற்செய்தி கூட்டங்களை நல்ல முறையில் நடத்தினோம். உங்களுக்கு அந்தப் புகைப்படங்களை அனுப்ப விரும்புகிறேன்.இந்தக் கூட்டங்களில் தேவனுடைய வல்லமையையும், மகத்துவத்தையும் அறிவித்தோம். இந்தக் கூட்டங்களில் ஏராளமான இந்துமக்கள் இரட்சிப்பின் திட்டத்தை பெற்றுக்கொண்டார்கள். இங்கே நாங்கள் போதகர் அலமோவிற்காகவும், உங்கள் சுகத்துக்காகவும், உங்கள் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரன்,

சாலமோன் ராஜி கோலா ஆந்திரபிரதேசம், இந்தியா

## நம்முடைய கிரகத்தின் மேல் பறந்துக் கொண்டிருக்கும் பரலோகதூதர்கள

*(பக்கம் 3 லிருந்து தொடர்கிறது)*

ள். நம்பிக்கையுடன், உங்கள் நன்மைக்காக சொல்கிறோம்[16] உங்கள் வாழ்வில் இந்தப் பொய்யை நம்பமாட்டீர்கள் என்று விசுவாசிக்கிறோம். அது உண்மை அல்ல. நீங்கள் இரட்சிக்கப்பட்டு பரலோகத்தில் உங்கள் பிதாவுடனும், குமாரனுடனும், பரிசுத்த ஆவியுடனும், விசுவாசித்து தேவன்மேல், அவருடைய குமாரன் இயேசுகிறிஸ்துவுடனும், விசுவாசம் வைத்த அனைவருடனும் நித்திய வாழ்வைக் கழிக்க விரும்பினால், இந்த ஜெபத்தைச் சொல்லவும்.

**என்னுடைய தேவனே என் ஆண்டவரே, நான் ஒரு பாவி என் ஆத்துமா மீது இரக்கம் வையும்.[17] இயேசு கிறிஸ்துவே ஜீவனுள்ள தேவனின் குமாரன் என்பதை நான் விசுவாசிக்கிறேன்.[18] என்னுடைய முந்தைய பாவங்களை மன்னிக்கும்படியாக அவர் சிலுவையில் மரித்து விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தினார் என்பதையும் விசுவாசிக்கிறேன்.[19] பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதையும் விசுவாசிக்கிறேன்,[20] எனவே அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து என்னுடைய அறிக்கையையும் இந்த ஜெபத்தையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.[21] நான், இதயத்தின் கதவைத் திறந்து ஆண்டவர் இயேசுவே உம்மை நான் என் இதயத்தினுள் அழைக்கிறேன்.[22] கல்வாரியிலே என்னுடைய இடத்திலே நீர் சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் என்னுடைய அசுத்தமான பாவங்கள் அனைத்தையும் கழுவியருளும்.[23] கர்த்தராகிய இயேசுவே என்னைப் புறம்பே தள்ளமாட்டீர்; என் பாவங்களை மன்னித்து எனது ஆத்துமாவை மீட்டருள்வீர். நான் அதை அறிவேன் ஏனென்றால் உம்முடைய வார்த்தையான பரிசுத்த வேதாகமம் அப்படிச் சொல்கிறது.[24] நீர் ஒருவனையும் புறம்பே தள்ளுவதில்லை என்று உம்முடைய வார்த்தை சொல்கிறது, அதில் நானும் அடங்கியிருக்கிறேன்.[25] ஆகையால், நீர் எனக்குச் செவிகொடுத்திருக்கிறீர் என்பதை அறிவேன், மற்றும் நீர் எனக்குப் பதிலளித்தீர் என்பதையும் நான் அறிவேன்.[26] என்னுடைய ஆத்துமாவை இரட்சித்ததற்காக இயேசு ஆண்டவரே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன் மேலும் நீர் கட்டளையிட்டவைகளைச் செய்தும் இனிமேல் பாவம் செய்யாமலும் என்னுடைய நன்றியைக் காண்பிப்பேன்.[27]**

இரட்சிப்பிற்குப் பிறகு, ஜலத்திலே முழுவதுமாக மூழ்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுங்கள் என்று இயேசு கூறினார்.[28] கிங் ஜேம்ஸ் பதிப்பு வேதாகமத்தைக் கவனமாகப் படித்து அது சொல்வதைச் செய்யுங்கள்.[29]

உங்கள் இரட்சிப்பைக் குறித்து பிறரிடம் சொல்ல வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். போதகர் டோனி அலமோ அவர்களின் சுவிசேஷ பிரசுரங்களைக் கொடுக்கிறவர்களாக மாறலாம். பிரசுரங்களை நாங்கள் உங்களுக்கு இலவசமாக அனுப்பி வைப்போம். இன்னும் அதிகப்படியான தகவலுக்கு எங்களை அழையுங்கள் அல்லது மின்னஞ்சல் செய்யுங்கள். இந்தச் செய்தியைப் பிறரோடும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இந்த உலகம் இரட்சிப்படைய நீங்கள் விரும்பினால், இயேசு கட்டளையிட்டது போல, தேவனை, அவருடைய தசமபாகத்திலும் காணிக்கையிலும் வஞ்சிக்காதிருங்கள். தேவன் சொன்னார், “மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் [இந்த முழு உலகமும்] என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் [இரட்சிப்படைந்த ஆத்துமாக்கள்] ஆகாரம் [ஆவிக்குரிய ஆகாரம்] உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் [உங்கள் மொத்த வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு] பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசிர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்” (மல்கியா 3:8-12).

**16** ஏசா. 66:3-4, 2 தெச. 2:3-12 **17** சங். 51:5, ரோமர் 3:10-12, 23 **18** மத். 26:63-64, 27:54, லூக்கா 1:30-33, யோவான் 9:35-37, ரோமர் 1:3-4 **19** அப். 4:12, 20:28, ரோமர் 3:25, 1யோவான் 1:7, வெளி. 5:9 **20** சங். 16:9-10, மத். 28:5-7, மாற்கு 16:9,12,14, யோவான் 2:19, 21, 10:17-18, 11:25, அப். 2:24, 3:15, ரோமர் 8:11, 1கொரி. 15:3-7 **21** லூக்கா 22:69, அப். 2:25-36, எபி. 10:12-13 **22** 1கொரி. 3:16, வெளி. 3:20 **23** எபே. 2:13-22, எபி. 9:22, 13:12, 20-21, 1யோவான் 1:7, வெளி. 1:5, 7:14 **24** மத். 26:28, அப். 2:21, 4:12, எபே. 1:7, கொலோ. 1:14 **25** மத். 21:22, யோவான் 6:35, 37-40, ரோமர் 10:13 **26** எபி. 11:6 **27** யோவான் 5:14, 8:11, ரோமர் 6:4, 1கொரி. 15:10, வெளி. 7:14, 22:14 **28** மத். 28:18-20, யோவான் 3:5, அப். 2:38, 19:3-5 **29** உபா. 4:29, 13:4, 26:16, யோசுவா 1:8, 22:5, 2தீமோ. 2:15, 3:14-17, யாக்கோபு 1:22-25, வெளி. 3:18

*மேலும் விபரங்களுக்கு அல்லது ஆர்வமாயிருக்கிற பிற தலைப்புகளிலுள்ள புத்தகங்களுக்கு தயவுகூர்ந்து எங்களை தொடர்பு கொள்ளவும்.*

Tony Alamo, World Pastor, Tony Alamo Christian Ministries Worldwide • P.O. Box 2948, Hollywood, CA 90078
இருபத்து நான்கு மணிநேர ஜெப மற்றும் தகவல் தொடர்பு எண்: +1 (661) 252-5686 • ஃபேக்ஸ +1 (661) 252-4362
www.alamoministries.com • info@alamoministries.com

*டோனி அலமோ உலகளாவிய கிறிஸ்தவ ஊழியங்களானது முழு உள்ளத்தோடும் ஆத்துமாவோடும் மனதோடும் மற்றும் முழு பலத்தோடும் கர்த்தருக்கு உண்மையிலேயே ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் எங்களுடைய அமெரிக்க ஐக்கிய பகுதியில் இருக்கிற யாவரும் வாழ்வதற்குத் தேவையான பொருட்களோடு கூடிய ஒரு இடத்தை வழங்குகிறது.*

நியு யார்க் நகரத்தில் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் மாலை 8 மணிக்கு மற்றும் பிற இடங்களில் தினமும் இரவிலும் ஆராதனைகள் நடத்தப்படுகிறது. தகவலுக்கு தயவுகூர்ந்து +1 (908) 937-5723 ஐ அழையுங்கள். ஒவ்வொரு ஆராதனைக்குப் பிறகும் உணவு பரிமாறப்படுகிறது. 333க்கு மேலான தீர்க்கதரிசனங்களில் வெளிப்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டிலிருந்து கிறிஸ்துவைக் வெளிப்படுத்துகிற போதகர் அலமோவினுடைய புத்தகமான மேசியாவைக் கேளுங்கள்.

*போதகர் அலமோ அவர்களுடைய புத்தகங்களை விநியோகிக்கிறவர்களாகி ஆத்துமாக்களை அறுவடை செய்யும் பணியாளராகுங்கள்.*

*எங்களுடைய எல்லாப் புத்தகங்களும் ஒலிவடிவ செய்திகளும் அனுப்புவது உட்பட்ட செலவுகளும் இலவசமே.அவைகளுக்காக உங்களிடம் யாராவது கட்டணம் வசூலிக்க முற்பட்டால், தயவுகூர்ந்து கலெக்ட் நிறுவனத்தை இந்த எண்ணில் +1 (661) 252-5686 அழைக்கவும்.*

இந்த புத்தகம் இரட்சிப்பின் மெய்யான திட்டத்தைக் கொண்டிருக்கிறது (அப். 4:12).

இதைத் தூர வீசி எறியாதீர்கள், வேறு யாரிடமாவது கொடுக்கவும்.

பிற நாடுகளில் இருக்கிறவர்கள் தங்கள் சொந்த மொழியில் இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்க நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம். நீங்கள் அச்சிட்டால், தயவுகூர்ந்து இந்தக் காப்புரிமையையும் பதிவையும் சேர்த்துக்கொள்ளுங்கள்:

© காப்புரிமை மார்ச் 2013, 2015 எல்லா உரிமையும் உலக போதகர் டோனி அலமோவிற்கே உரியதாகும். ® பதிவு செய்யப்பட்டது மார்ச் 2013, 2015

TAMIL—VOLUME 17700— *HEAVENLY ANGELS HOVERING OVER OUR PLANET*